[*Note.*—**An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.**]

II.—VOTING ON DEMANDS FOR GRANTS FOR THE YEAR 1954–55—*cont*.

(1) DEMAND XII—ADMINISTRATION OF JUSTICE.

THE HON. SRI K. P. KUTTIKRISHNAN NAIR :—" Sir, on the recommendation of the Governor, I move—

' *That Government be granted a sum not exceeding Rupees* 1,08,36,000 *under Demand XII—Administration of Justice.*' "

MR. SPEAKER :—" Motion moved—

' That Government be granted a sum not exceeding Rupees 1,08,36,000 under Demand XII—Administration of Justice.' " 11-55 a.m.

SRI S. P. THANGAVELU :—" Sir, I move—

' *That the allotment of Rs.* 1,08,36,000 *under Demand XII—Administration of Justice be reduced by Rs.* 100.' "

The object of my Cut Motion is to discuss the policy of the Government.

" கனம் சபாநாயகர் அவர்களே, இந்த வெட்டுப்பிரேரணையை பிரேரித்து இரண்டொரு வார்த்தைகள் சொல்லும்போது இந்த மாகாண் நீதிமன்றங்களைப்பற்றி என் தனிப்பட்ட அபிப்பிராயத்தைத் தெரிவிப்பதற்காக இந்த வெட்டுப் பிரேரணையை கொண்டுவரவில்லை என்று முதலில் தெரிவித்துக்கொள்ளுகிறேன். நீதிமன்றங்கள் எப்படி இருக்கவேண்டும்? மேலும் மேலும் பொதுமக்கள் நீதிமன்றங்களிடத்திலே, கௌரவமும், மரியாதையும் கொள்ள, அவர்களிடத்திலே எவ்விதம் நம்பிக்கையை உண்டாக்கவேண்டும் என்பதைப் பற்றி சில வார்த்தைகள் சொல்ல ஆசைப் படுகிறேன்.

" நீதி நிர்வாகப் பிரிவினையை அரசாங்கம் ஏற்றுக்கொண்டபோதிலும், அந்தக் கொள்கையை நடைமுறையில் கொண்டுவருவதற்கு மிகவும் தாமதம் ஏற்படுகிறது. ஒரு ஜில்லாவிற்கு மாத்திரம் இந்தப் பிரிவினை எடுத்துக்கொண்டு வந்திருக்கிறது. ஆனால் திருச்சி ஜில்லாவில் அதற்கான ஏற்பாடுகளோ திருத்தங்களோ செய்யவில்லை. இப்படி இருந்தால் பிறகு நீதி இலாக்காவைப் பிரிப்பதற்கான அவசியம் இல்லை என்ற சிலரது கொள்கையை ஒத்துக்கொள்ளக்கூடும். நீதி நிர்வாகம் நல்லமுறையில் நடக்க வேண்டுமானால் சில கொள்கைகளை அடிப்படையில் மாற்றியாக வேண்டியிருக்கிறது. உதாரணமாக பல ஐ.சி.எஸ். அதிகாரிகளை நீதி இலாக்காவில் போட்டுவைப்பது விரும்பத்தக்கதல்ல. இவர்களுக்கு ஐ.சி.எஸ். அதிகாரிகளாக தேறுவதற்கு முன் நிர்வாகப் பயிற்சி அளிக்கப்பட்டு ஒருவாறு அந்த அளவிலே பண்பட்டு இருக்கிறார்கள். அந்தக் காரணத்தினாலேயே இவர்களை நீதி இலாக்காவிற்கு போடலாகாது. ஐ.சி.எஸ். ஆபீஸர்கள் என்னதான் திறமைசாலிகளாய் இருந்தாலும் அவர்களை இந்த இலாக்காவிற்குப் போடலாகாது என்பதுதான் என் விருப்பம். நீதிபதிகளாய் இருப்பவர்கள் அதற்குவேண்டிய சட்டம் தெரிந்தவர்களாகவும், சட்ட அனுபவம் பெற்றவர்களாகவும் திறமைசாலிகளாகவும் இருக்கவேண்டும். வக்கீல்களாக இருப்பவர்கள் அந்தத் தொழிலிலேயே பலவருஷங்கள் பழக்கப்பட்டு நீதிபதியாக வருவது சகஜம். அதுதான் முறை. ஆனால் நீதி நிர்வாகக் கொள்கைகளில் ஐ.சி.எஸ். அதிகாரிகளுக்கு இருக்கும் அனுபவத்தைவிட, அனுபவம் உள்ள வக்கீல்கள் மிகவும் இந்த இலாக்காவிற்குப் பயன்தரக் கூடியவர்களாக இருப்பார்கள் என நம்புகிறேன். ஐ.சி.எஸ். அதிகாரிகளினுடைய திறமையையும் சேவைகளையும் மற்ற இலாக்காக்கள் பயன்

[Sri S. P. Thangavelu] [18th March 1954

படுத்திக் கொள்ளலாம் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்ல விரும்புகிறேன். மற்ற இலாக்காக்கள் ஏற்கனவே இவர்களுடைய சேவைகளைப் பயன்படுத்திக்கொண்டு வேண்டிய அளவில் பிரயோசனம் அடைந்திருக்கிறது. இவர்களிடத்தில் மக்களுக்கு இந்த நிர்வாகத்தைப்பற்றி ஒரு நல்லெண்ணம் ஏற்பட்டிருக்கிறது. நீதி இலாக்காவில் திறமைபற்றியும் கௌரவம் பற்றியும் பொதுமக்களுக்கு ஒருவிதமான நம்பிக்கைக் குறைவு ஏற்பட்டு வருவதற்கு சர்க்கார் வசதி அளிக்காமல் இருக்கவேண்டும். நீதி இலாக்காவிற்கும் மற்ற இலாக்காவிற்கும் இந்த விஷயத்தில் மாறுபாடுகள் இருக்கின்றன.

"அடுத்தப்படியாக போலீஸ் இலாக்காவில் சட்டப்பயிற்சி இல்லாதவர்கள் தான் பெரும்பாலும் இருக்கிறார்கள். இவர்களில் பலர் சட்டநுணுக்கம் தெரியாதவர்களாக இருப்பதனால், கொலைக்குற்றம்போன்ற கடுமையான குற்றங்களில் அவர்கள் கையாளும் வழிகள் கோர்ட்டுகளில் தோற்றுவிடக் கூடிய நிலைமையில் இருக்கிறது. இதனால் பரிபாலனத்தில் பொதுமக்களுக்கு நம்பிக்கைக் குறைவு ஏற்படுகிறது. இந்தக் குறைகளை நிவர்த்திக்க வேண்டுமானால் போலீஸ் இலாக்காவில் ஐ.சி.எஸ். அதிகாரிகளை எடுத்துக் கொள்ளவேண்டும். இதனால்போலீஸ் இலாக்கா பூராவும் நன்மை ஏற்படும், பொதுமக்களுக்கும் இந்த நிர்வாகத்தைப் பற்றி ஒரு நல்ல எண்ணம் ஏற்படும். 'லஞ்சஊழல்களைத் தடுப்பதற்கு ஐ.சி.எஸ். அதிகாரிகள் தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்வார்கள். போலீஸ் நிர்வாகம் இதனால் நல்ல முறையில் நடக்கக்கூடும்,' என்று இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்ல ஆசைப்படுகிறேன். அதோடு வக்கீலாக இருப்பவர்கள்தான் நீதிபதிகளாகிறார்கள். இவர்கள் எவ்வளவுக்கெவ்வளவு பாரபட்சமற்ற முறையில் இருந்தபோதிலும் பொதுமக்களுடைய மனதிலே ஒருவிதமான சந்தேக எண்ணம் இவர்களைப்பற்றி இருந்துகொண்டிருக்கிறது என்று சொல்ல ஆசைப்படுகிறேன். இவர்களைப்பற்றி பொதுமக்களிடம் தவறான கருத்துக்கள் ஏற்பட்டிருக்கிறது என்று இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்ல ஆசைப்படுகிறேன். இந்த எண்ணங்கள் மக்களிடையே இனி நிலவாதிருப்பதற்கு இந்த மாகாணங்களில் இருக்கும் நீதிபதிகளை இன்னொரு மாகாணத்திற்கும் மற்ற மாகாணத்திலிருக்கும்நீதிபதிகளை இந்த மாகாணத்திற்கும் அமர்த்துவது மிகவும் உசிதமான காரியம் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்ல விரும்புகிறேன். மற்ற மாகாணங்களிலும் நீதி பரிபாலனம் செய்வதற்கு பழக்கப்பட்ட வக்கீல்களைத்தான் நியமிக்கிறார்கள். ஒரு மாகாணத்தில் இருப்பவரை மற்றோரு மாகாணத்திற்கு மாற்றினால் மிகவும் உசிதமாக இருக்கும். ஆனால் ஒரு மாகாணத்தில் இருக்கும் பழக்கப்பட்ட வக்கீலை அதே மாகாணத்தில் நீதிபதியாக அமர்த்தினால் அவர் என்னதான் பாரபட்சமற்றவராக நடந்துகொண்டபோதிலும், மக்களிடையே அவர்களைப் பற்றி நம்பிக்கையில்லாமற் போய்விடுகிறது, ஏனென்றால் அவர்களில் பலர் பலருக்கு வேண்டியவர்களாகவும் சொந்தக்காரர்களாகவும் இருக்கிறார்கள். இவர்கள் தங்களுக்கு வேண்டியவர்களுக்குப் பலவிதமான சலுகைகள் செய்வார்களென்று மக்களிடையே தவறான அபிப்பிராயம் இருந்துவருகிறது. ஆதலால் ஒரு மாகாணத்தில் இருப்பவரை இன்னோரு மாகாணத்திற்கு மாற்றினால் ஜனங்களிடத்தில் நீதிபதிகளையைப் பற்றியவரை நல்ல நம்பிக்கையும், கௌரமும் இருக்கும்.

"சாதாரணமாக திருச்சியில் இப்பொழுது மாஜிஸ்ட்ரேட் கோர்ட் இருக்கும் நிலைமை மகா மோசமானது. மிகவும் மட்டமான முறையில் அவைகள் மாஜிஸ்ட்ரேட்டுக்களால் நடத்தப்படுகின்றன. திருச்சியிலும் மற்ற ஊர்களிலும் கோர்ட்டுகள் இருக்கிறது என்று சொல்லிக்கொள்வதற்குக்கூட இடமில்லாமலிருக்கிறது. இன்றைக்கு இருக்கும் கோர்ட்டுகளெல்லாம் பழைய காலத்திலே கட்டப்பட்ட கட்டிடங்களாகவே இருக்கின்றன. சில இடங்களிலெல்லாம் கோர்ட்டுகளில் ஜனங்கள் உட்காருவதற்குக்கூட இடமில்லாமல் இருக்கிறார்கள். இப்படியிருந்தால் நீதிபதிக்கு எந்தவிதத்தில் கௌரவமோ, மதிப்போ அளிக்கமுடியும். இந்தக் கோர்ட்டுகளை நல்ல இடங்களில் ஏற்படுத்துவதற்கு அரசாங்கம் நடிவடிக்கை எடுக்க வேண்டும். வக்கீல்கள் தங்குவதற்கு இடவசதி செய்யப்படவேண்டும். வக்கீல்கள் இளைப்பாறிக்கொள்வதற்கு வசதியில்லாமல் இருக்கிறது. இதே மாதிரி பல கோர்ட்டுகளில் இடவசதியில்லாமையினால் கோர்ட்டுக்கு வெளியே